பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

04 10 2023 12 40
புதன்கிழமை நண்பகல்

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. பிரதமர் திரு நரேந்திரமோடி ராஜஸ்தான் மாநிலத்தில் ஐயாயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களை நாளை தொடங்கி வைக்கிறார்.

2. தெலங்கானா மாநில சட்டப்பேரவைத் தேர்தல் முன்னேற்பாடுகள் தொடர்பாக தேர்தல் ஆணையர்கள் இன்று அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொள்கின்றனர்.

3. நாட்டில் புதிய மருத்துவக் கல்லூரிகளை தொடங்குவது தொடர்பாக தேசிய மருத்துவ ஆணையத்தின் அறிவிப்பை நிறுத்தி வைக்குமாறு தமிழக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

4. சிக்கிம் மாநிலத்தில் மேகவெடிப்பு காரணமாக ஏற்பட்ட திடீர் வெள்ளத்தில் சிக்கிய 23 ராணுவ வீரர்கள் உட்பட பலரை தேடும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

5. ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இந்தியா இன்று ஒரு தங்கம், மூன்று வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளது.

---- *<u>இனி விரிவான செய்திகள்</u>* ---

**[]<<<>>>[]**

பிரதமர் திரு நரேந்திரமோடி ராஜஸ்தான் மாநிலம் ஜோத்பூருக்கு நாளை பயணம் மேற்கொள்கிறார்.

ஐயாயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான நிறைவுற்ற திட்டங்களை தொடங்கி வைப்பதுடன், புதிய திட்டங்களுக்கும் அவர் அடிக்கல் நாட்டுகிறார்.

ஜோத்பூரில் உள்ள எய்ம்ஸ் மருத்துவமனையில் 350 படுக்கை வசதி கொண்ட அவசரகால விபத்து சிகிச்சை மையத்துக்கும் அவர் அடிக்கல் நாட்டுகிறார்.

ராஜஸ்தான் மாநிலத்தில் பிரதமரின் ஆயூஷ்மான் பாரத் திட்டத்தின் கீழ் சுகாதார உள்கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கான ஏழு அவசரகால மருத்துவ பிரிவுகளுக்கும் பிரதமர் அடிகல் நாட்டுகிறார்.

நோய்களை கண்டறிதல், சிறப்புப் படுக்கைகள், தனிநபர் அறைகள், நவீன அறுவை சிகிச்சை மையங்கள், ரத்த சுத்திகரிப்பு மையங்கள் போன்றவை இந்த நவீன பிரிவுகளில் உருவாக்கப்படும் என்று எமது செய்தியாளர் கூறுகிறார்.

ஜோத்பூர் விமான நிலையத்தில் அதிநவீன புதிய முனையத்துக்கும் பிரதமர் அடிக்கல் நாட்டுகிறார்.

480 கோடி ரூபாய் மதிப்பில் அமைக்கப்பட உள்ள இந்த புதிய முனையம் 24 ஆயிரம் சதுர மீட்டர் அளவில் கட்டப்படும்.

ஆண்டுதோறும் 35 லட்சம் பேர் பயணிப்பதற்கு வசதியாக இந்த முனையம் அமைக்கப்படும் என்று எமது செய்தியாளர் கூறுகிறார்.

ஜோத்பூர் ஐ ஐ டி-யில் ஆயிரத்து 135 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டுள்ள அதிநவீன தொழில்நுட்பத்துடன் கூடிய மையத்தை பிரதமர் திறந்து வைக்கிறார்,

ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள மத்திய பல்கலைக்கழகத்தில் புதிய பிரிவுகளுக்கு அவர் அடிக்கல் நாட்டுகிறார்.

புதிய நூலகம், தங்கும் விடுதி, பணியாளர்களுக்கான குடியிருப்புகள் போன்றவை இங்கு அமைக்கப்பட உள்ளன.

125-எ தேசிய நெடுஞ்சாலை ஏழு புறநகர் பாதைகளையும், நான்குவழிப் பாதைகளையும் அமைப்பதற்கும் பிரதமர் நாளை அடிக்கல் நாட்டுகிறார்..

ஆயிரத்து 475 கோடி ரூபாய் மதிப்பில் இந்த சாலை பணிகள் மேற்கொள்ளப்படும் என்று எமது செய்தியாளர் கூறுகிறார்.

ராஜஸ்தான் மாநிலம் ஜெய்சால்மரிலிருந்து – புதுதில்லி வரையும், ருணிச்சா விரைவு ரயில் சேவையையும் திரு நரேந்திரமோடி தொடங்கி வைக்கிறார்.

மார்வார் ஜங்சன் முதல் காம்ப்ளிகட் வரை புதிய பாரம்பரிய ரயில் சேவையையும் அவர் தொடங்கி வைக்கிறார்.

அம்மாநிலத்தில் 145 கிலோ மீட்டர் தொலைவிலான அகல ரயில்பாதை திட்டத்தையும் பிரதமர் நாட்டிற்கு அர்ப்பணிக்கிறார்.

[]<<<>>>[]

தெலங்கானா மாநிலத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ளதை அடுத்து, அதற்கான முன்னேற்பாட்டு பணிகளை மேற்கொள்வது தொடர்பாக தலைமை தேர்தல் ஆணையர் திரு ராஜீவ்குமார் மற்றும் தேர்தல் ஆணையர்கள் பங்கேற்றுள்ள ஆலோசனை கூட்டம் தற்போது நடைபெற்று வருகிறது.

முன்னதாக வாக்காளர்களுக்கு இடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஹைதராபாத்தில் இன்று தேர்தல் விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது.

மிதிவண்டி மற்றும் நடைபயணத்தின் மூலம் வாக்காளர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் பேரணியை தலைமை தேர்தல் ஆணையர் திரு ராஜீவ்குமார் தொடங்கி வைத்தார்.

[]<<<>>>[]

சிக்கிம் மாநிலத்தில் மங்கன் மாவட்டத்தில் உள்ள லோநெக் ஏரியின் மீது நேரிட்ட மேகவெடிப்பு காரணமாக திடீர் வெள்ளம் ஏற்பட்டது.

மலைப்பகுதி என்பதால் லச்சேன் பள்ளத்தாக்கில் உள்ள டியஸ்டா நதியில் வெள்ளம் பெருக்கெடுத்தது.

இந்த பகுதியில் ராணுவ முகாம்கள் செயல்பட்டு வருவதையடுத்து, வெள்ளப்பெருக்கில் ராணுவ வீரர்களும், வாகனங்களும் நீரில் அடித்துச் செல்லப்பட்டதாக அம்மாநில அரசு தெரிவித்துள்ளது.

சிக்கிம் மாநில முதலமைச்சர் திரு பி எஸ் தமங், பாதிப்பு ஏற்பட்ட பகுதிகளை இன்று நேரில் பார்வையிட்டார்.

இது தொடர்பாக ஆகாஷவாணிக்கு பேட்டியளித்த அம்மாநில பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் துணைத்தலைவர் திரு வி கே சர்மா, மங்கன் மாவட்டத்தில் பனிப்பாறைகள் உருகியதை அடுத்து இந்த திடீர் வெள்ளப்பெருக்கு நேரிட்டதாகக் கூறினார்.

இந்த சம்பவத்தில் 23 ராணுவ வீரர்களை தேடும் பணி மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

கேங்டாக் மாவட்டத்தில் வெள்ளப்பெருக்கில் நான்கு பேர் காயமடைந்ததாகவும், அவர்கள் உடனடியாக மீட்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாகவம் அவர். குறிப்பிட்டார்.

நம்சி மாவட்டத்தில் வெள்ளத்தில் சிக்கியை 25 பேர் பத்திரமாக மீட்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

இந்த மாவட்டத்தில் இரண்டு பாலங்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டதாகவும், வெள்ளத்தில் சிக்கியவர்களை மீட்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.,

பாதிக்கப்பட்ட பகுதிகளில் வசிக்கும் சுமார் 500 பேர் நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

சிக்கிம் மாநிலத்துடன் - மேற்குவங்க மாநிலத்தை இணைக்கும் தேசி நெடுஞ்சாலையில் நான்கு இடங்களில் கடும் சேதம் ஏற்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

சிக்கிமில் பல இடங்களில் பாலங்கள் அடித்துச் செல்லப்பட்டுள்ளதாகவும், தொலைத் தொடர்பு கட்டமைப்பு முற்றிலும் சேதமடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேகவெடிப்பால் டியஸ்டா அணையிலிருந்து நாலாயிரம் முதல் ஆறாயிரம் கன அடி தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

பக்கியாங், கேங்டாக், நம்சி மற்றும் மங்கன் மாவட்டங்களில் உள்ள அரசு மற்றும் தனியார் பள்ளிகளுக்கு வரும் எட்டாம் தேதி வரை விடுமுறை அளிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

நாட்டில் புதிய மருத்துவக் கல்லூரிகளை தொடங்குவது தொடர்பாக தேசிய மருத்துவ ஆணையம் வெளியிட்டுள்ள அறிவிப்பை உடனடியாக நிறுத்தி வைக்க வேண்டுமென்று தமிழக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் இன்று பிரதமர் திரு நரேந்திரமோடிக்கு எழுதியுள்ள கடிதத்தில், புதிய கட்டுப்பாடுகளை விதிப்பதன் மூலம் எதிர்காலத்தில் மருத்துவத் துறையில் புதிய மருத்துவமனைகளும், புதிய முதலீடுகளும் தமிழ்நாட்டிற்கு வருவதற்கான வாய்ப்பு முற்றிலும் தடைபடும் என்று கூறியுள்ளார்.

இது தொடர்பாக மாநில அரசுகளுடன் ஆலோசனைகளை மேற்கொள்வதற்கு மத்திய சுகாதார அமைச்சகத்தை அறிவுறுத்துமாறு திரு மு க ஸ்டாலின், பிரதமரை கேட்டுக் கொண்டுள்ளார்.

**[]<<<>>>[]**

கன்னியாகுமரி மாவட்டத்தில் மின்சாரம் தாக்கி உயிரிழந்த மூன்று பேரின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு லட்சம் ரூபாய் நிவாரண உதவி வழங்கப்படும் என தமிழக முதலமைச்சா திரு மு க ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பேரும் எதிர்பாரத விதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்திருப்பது வேதனை அளிப்பதாகவும், அவர்களுக்கு தமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதாகவும் முதலமைச்சர் கூறியுள்ளார்.

**[]<<<>>>[]**

திருப்பூரில் சர்வதேச ஆடை கண்காட்சி வரும் 12-ஆம் தேதி முதல் 14-ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

ஆடை தயாரித்தலில் புதுமை படைத்தல், நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதில், சுற்றுச்சூழலுக்கு உகந்த ஆடைகளை உருவாக்குதல் போன்ற பல தலைப்புகளின் கீழ் இந்த கண்காட்சி நடைபெறுகிறது.

திருப்பூர், சென்னை, கோயம்புத்தூர், கரூர் மற்றும் குஜராத் ஆகிய பகுதிகளிலிருந்து 70 அமைப்புகள் இந்த கண்காட்சியில் பங்கேற்கின்றன.

அமெரிக்கா, ஐரோப்பா, பிரிட்டன் மற்றும் உள்ளிட்ட வெளிநாடுகளிலிருந்தும் சிறப்பு அழைப்பாளர்களும் இந்த கண்காட்சியில் பங்கேற்க உள்ளதாக இந்திய ஆடை தயாரிப்பு சங்கத்தின் தலைவர் திரு ஏ சக்திவேல் தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

திரிபுரா மாநிலத்தில் நேஷனல் லிபரேசன் ப்ரண்ட் மற்றும் ஆல் திரிபுரா டைகர் ஃபோர்ஸ் அமைப்புகள் சட்டவிரோதமானவை என மத்திய உள்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.

அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு இது நடைமுறையில் இருக்கும் என்று அமைச்சகம் கூறியுள்ளது.

இந்திய ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டுக்கும் எதிராக இந்த அமைப்புகள் செயல்படுவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

**[]<<<>>>[]**

லடாக்கில் 26 தொகுதிகளில் இன்று தேர்தல் நடைபெறுகிறது.

87 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

278 மையங்களில் வாக்குப்பதிவு அமைதியாக நடைபெற்று வருவதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.,

ஒவ்வொரு வாக்குப்பதிவு மையத்திலும் நான்கு தேர்தல் அதிகாரிகள் கண்காணிப்பு பணிகளை மேற்கொண்டு வருவதாக அவர் மேலும் கூறுகிறார்.

**[]<<<>>>[]**

தேசிய முதலீடு மற்றும் உள்கட்டமைப்பு நிதியத்துடன் சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பான் வங்கி 600 மில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.

இதன்கீழ் பருவநிலை மாற்றம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான முதலீடுகள் இரு நாடுகளிலும் மேற்கொள்ளப்படும்.

இது தொடர்பாக மத்திய நிதி அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், நிதியத்துக்கான 49 சதவீதத்தை இந்தியா வழங்கும் என்றும், 51 சதவீத நிதியை ஜப்பான் வழங்கும் என்றும் கூறியுள்ளது.

குறைந்த அளவு கார்பன் வெளியீடுகளை குறைப்பது தொடர்பாகவும், நீடித்த சுற்றுச்சூழல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவும் இந்தியாவில், ஜப்பான் முதலீட்டுத் திட்டங்களை செயல்படுத்தும்.

இரு நாடுகளுக்கும் இடையேயான உறவில் புதிய அத்தியாயம் தொடங்கி இருப்பதாக மத்திய நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இந்தியா இன்று ஒரு தங்கம், மூன்று வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளது.

சீனாவில் நடைபெற்று வரும் இப்போட்டியில், வில்வித்தை கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் ஜோதி சுரேகா – ஓஜாஸ் **deotale** இணை தங்கப்பதக்கம் வென்றது.

35 கிலோமீட்டர் கலப்பு தொடர் நடை ஓட்டப் பிரிவில் ராம்பாபு, மஞ்சுராணி இணை வெண்கலப்பதக்கம் வென்றது.

ஸ்குவாஷ் கலப்பு இரட்டையர் பிரிவில் அபய்சிங் - அனகத் சிங் இணை இணை வெண்கலப்பதக்கம் வென்றது.

மகளிர் 57 கிலோ குத்துச்சண்டை பிரிவல் பர்வின்ஹூடா வெண்கலப்பதக்கம் வென்றார்.

இப்போட்டியில் இந்தியா 16 தங்கம், 26 வெள்ளி, 31 வெண்கலப் பதக்கம் உள்ளிட்ட 73 பதக்கங்களுடன் நான்காவது இடத்தில் தொடர்ந்து நீடிக்கிறது.

பேட்மிண்டன் பிரிவில் எச் எஸ் பிரணாய், மற்றும் பி வி சிந்து கால் இறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

ஹாக்கிப் போட்டியில் இந்தியா இன்று தென்கொரியாவை எதிர்கொள்கிறது.

இப்போட்டியில் பதக்கங்களை வென்ற வீரர்களுக்கு மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு அனுராக் தாக்கூர் பாராட்டு தெரிவித்துள்ளார்.

***End of News***